மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

**O.S.No.578/2023**
**Old.No.685/2007**
**PW 5**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சீனிவாசன் | மதம் | : |
| தந்தை / கணவர் பெயர். | : சேகர் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

<u>**முதல் விசாரணை**</u>

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இவ்வழக்கில் நான் தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியத்தில் தலைமை நில அளவராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். மூங்கில் ஏரி, Scheme Order என்ற இடத்தில் மனை எண்.423ல் கிழக்கு பக்கத்தில் பொது வழிப்பாதையில் ஆக்கிரமிப்பு இருப்பதாக ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிடுகிறேன்.

குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் நான் எதன் அடிப்படையில் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியத்தில் இருந்து பெறப்பட்ட அனுமதி கடிதத்தின் பெயரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கில் எத்தனை அட்டவணை சொத்துக்கள் உள்ளது என்றுதெரியாது.இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கின் வாதிகள் என்ன பரிகாரம் கோரி உள்ளார்கள் என்று தெரியாது. தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியம் இவ்வழக்கில் 3வது பிரதிவாதியாக இருந்து வருகிறது. 3ம் பிரதிவாதி இவ்வழக்கில் பதில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

இவ்வழக்கில் 3ம்பிரதிவாதி தரப்பில் பதில் உரை தாக்கல் செய்யப்படாததால் 14.9.2009 அன்று ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி 3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒரு தலை பட்ச உத்தரவினை மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. இவ்வழக்கில் எங்கள் அலுவலகத்தில் இருந்து தேவநாதன் என்பவர் சாட்சியம் அளித்து அவரின் சாட்சியத்தை நீக்கரவு செய்ய இ.ம.7/2024 என்று மேல்முறையீட்டிற்கு கால தாமத மனு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மனுவில் எங்களது அலுவலகத்தில் இருந்து ஆஜராகி உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

பிளாட் எண்.423 ஆனது யார் பெயரில் அலார்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் யாருக்கும் ஒதுக்கப்படவில்லை என்று ஆவணங்கள் உள்ளது. பிளாட் எண்.423 சொத்தானது யாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடாத பட்சத்தில் எனது சாட்சி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிளாட் எண்.422 ஆனது யார் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் நடராஜன் என்பவர் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1976ல் மனைகளை ஒதுக்கீடு செய்த காலத்தில் இருந்து மூங்கில் ஏரி பகுதி என்றுதான் இருந்து வருகிறது என்றால் ஆம்.

வா.சா.ஆ.3ல் யார் பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஜானகி என்பவர் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.3ல் திருவள்ளுவர் தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1987 வரை இந்த முகவரியில் தான் இருந்து வருகிறது. 1999 ல் இருந்து எண்.1, பிள்ளையார் கோவில் தெரு,பொன்னி நகர், பம்மல் சென்னை.75 ஆக இருந்து

வருகிறது என்றால் அதைப்பற்றி தெரியாது. மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள அட்டவணை சொத்தில் எண்.1, பிள்ளையார் கோவில் தெரு,பொன்னி நகர், பம்மல் சென்னை.75 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆம்.

பிளாட்டுகளை ஒதுக்கீடு செய்யும்போது தகுதிப்பட்டியல்களை தயார் செய்து வைப்போம் என்றால் ஆம். தகுதிப்பட்டியல்கள் விவரத்தினை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேனா என்றால் ஆம். அதில் வாதிகள் பெயர் உள்ளதா என்றால் இல்லை. வாதிகள் பெயர் தகுதிப்பட்டியலில் இல்லாததால் வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் வாதிகள் அவர்க்ள்பெயரில் உள்ள அலார்ட்மெண்ட் உத்தரவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

தகுதிப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள நபர்கள் 3ஆண்டிற்குள் ரூ.25,000 செலுத்தி அவர்கள் பெயரில் உறுதி செய்து கொள்வார்கள் என்றால் அதைப்பற்றி தெரியாது. எங்கள் அலுவலகத்தில் தகுதிப்பட்டியலில் உள்ள நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்ட விவரம் தெரியாது. 1ம் வாதிக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து 3 வருடத்திற்குள் நோட்டீஸ் ஏதேனும் அனுப்பியுள்ளோமா என்றால் தெரியாது. அவ்வாறு 3 ஆண்டிற்குள் நோட்டீஸ் அனுப்பப்பட்டு கிரயத்தொகையினை வாதி செலுத்தியதாக ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியவில்லை. எங்கள் வாரியத்தின் நிபந்தனைகளை வாதிகள் பின்பற்றவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

வாதிகள் பெயரில் அலார்ட் மெண்ட் உத்தரவு இருந்து வராததால் பிளாட் எண்.423 ல் ஆக்கிரமிப்பாளர்கள் என்றால் சரிதான். வாதிகள் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதால் பிளாட் எண்.423 னை கையகப்படுத்த உத்தரவிட வேண்டும் என்றால் மேல் அதிகாரிதான் முடிவு செய்ய வேண்டும். எனது மேல் அதிகாரியின் உத்தரவின் பெயரில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். பிளாட் எண்.422 னை 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் உள்ளது என்றால் ஆம். அலார்ட்மெண்ட் உத்தரவில் பிளாட் எண்.423 இல்லை என்றும் பிளாட் எண்.423ஏ என்று வாதிக்கு ஏதேனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை.

வாரியத்திற்கான இடத்தினை அளவீடு செய்வதற்கு என்ன வழிமுறை என்றால் மனு கொடுக்க வேண்டும். கட்டணம் செலுத்தி பின்பு தரப்பினர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி அளவீடு செய்யப்படும். வா.சா.ஆ.5 ஆனது வாதிகள் வாரியத்திற்கு சொத்தினை அளவீடு செய்ய மனு கொடுக்கப்பட்டது என்றால் ஆம். வா.சா.ஆ.5ல் எண்.1, பிள்ளையார் கோவில் தெரு,மூங்கில் ஏரி , பம்மல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆம். மேற்படி மனுவை பெற்று வாதிகளிடம் ரசீது ஏதும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கொண்டு வந்த ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை.

வாதிகள் சொத்தினை அளவீடு செய்ய கட்டணம் செலுத்தி உள்ளார்களா என்று விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கட்டணம் செலுத்தாமல் நேரடியாக சர்வேயர் அளவீடு செய்தது சட்டத்திற்கு முரணானது என்றால் சரிதான். பி ஷெட்யூல் சொத்தினை யார் அளவீடு செய்தது என்றால் நில அளவையர் ஆறுமுகம் என்பவர். வா.சா.ஆ.15ல் யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. நான் எதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் வரைபடம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில்.

வா.சா.ஆ.15 ஆனது கட்டணம் எதுவும் பெறாமல் வாதிகளுக்கு ஆதரவாக ஆதாயம் பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ள ஆவணம் என்றால் சரியல்ல. **(சாட்சி அவற்றை கடுமையாக ஆட்சேபணை செய்துள்ளார்).** நிலத்தினை அளவீடு செய்வதற்கு எனது மேலதிகாரிகள் அறிவிப்பு ஏதேனும் கொடுத்துள்ளார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் கட்டணம் எதுவும் செலுத்தவில்லை என்றும் நோட்டீஸ் வரவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10ல் NSK ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

வா.சா.ஆ.10,11,14 மற்றும் 15 ஆனது வாதிகள் பொய்யாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானது என்றும் வாதிகளுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை - இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.